ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | நிதியியல் உளவறிதல் பிரிவு |
| திகதி | 2022 திசெம்பர் 12 |

## 2022 யூலை 01 தொடக்கம் 2022 நவெம்பர் 16 வரை நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான இணங்குவிப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்காக நிதியியல் உளவறிதல் பிரிவினால் நிருவாக ரீதியான தண்டப் பணங்களை விதித்தல்/சேகரித்தல்

2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 19(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 19(1)ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் பயனைக்கொண்டு, நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாத நிறுவனங்களின் மீது நிதியியல் தண்டப்பணங்கள் விதிக்கப்படுகின்றன. தண்டப்பணங்கள் நிதியியல் நிறுவனங்களின் தொடர்புடைய இணங்காமையின் தன்மை மற்றும் பாரதூரம் என்பனவற்றை பரிசீலனையிற் கொண்டு விதித்துரைக்கப்படுகிறது.

அதற்கமைய, பணம் தூயதாக்குதலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுக்கான இலங்கையின் ஒழுங்குமுறைப்படுத்துனர் என்ற ரீதியில், நிதியியல் நிதியியல் நிறுவனங்கள் மீதான இணங்குவித்தலை நடைமுறைப்படுத்துவதற்கு 2022 யூலை 01 தொடக்கம் 2022 நவெம்பர் 16 வரையான காலப்பகுதியில் உளவறிதல் பிரிவு கீழ்வேயுள்ளவாறு ரூ.10.75 மில்லியன் கொண்ட மொத்தத் தொகையினைத் தண்டப்பணமாக சேகரித்தது. தண்டப்பணமாக சேகரிக்கப்பட்ட நிதித் திரட்டு நிதியத்திற்கு வரவுவைக்கப்பட்டிருக்கிறது.

**1. டிஎப்சிசி பாங்க் பிஎல்சி**

**விதிப்புத் திகதி:** 2022 செத்தெம்பர் 08

**தொகை:** ரூ. 4,000,000.00 (ரூபா நான்கு மில்லியன்)

**கொடுப்பனவுத் திகதி:** 2022 ஒத்தோபர் 07

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

நிதியியல் உளவறிதல் பிரிவினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளைப் கடைப்பிடிப்பதற்கு தவறியமைக்காகவும், நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் (2,5 (ஆ), 6 மற்றும் 14(1) (ஆ) (iii) ஆம் பிரிவுகள்) ஏற்பாடுகளுடனும் 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்களின் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம்) விதிகள் 7, 8, 9, 10 மற்றும் 27(2) ஆகியவற்றுடனும் இணங்காமைக்காகவும் நிருவாக தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

**2. மக்கள் வங்கி**

**விதிப்புத் திகதி:** 2022 செத்தெம்பர் 08

**தொகை:** ரூ. 2,000,000.00 (ரூபா இரண்டு மில்லியன்)

**கொடுப்பனவுத் திகதி:** 2022 ஒத்தோபர் 11

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகளின் கீழ் பெயர்குறிக்கப்பட்ட ஆட்களுடன் வங்கி வியாபார தொடர்பை பேணியிருந்தமையினால், பெயர்குறிக்கப்பட்ட பட்டியலில் உள்ளடக்கப்பட்ட நிறுவனங்கள் அல்லது தனிப்பட்டவர்கள் எவருடனும் எந்தவொரு தொழில் உறவும் இடம்பெறவில்லை அல்லது தொடர்பைக் கொண்டிருக்கவில்லை என்பதை உறுதிசெய்வதற்கு ஏற்கனவேயுள்ள அனைத்து தொழில் தொடர்புகளையும் பரிசோதிப்பதற்கு தவறியமைக்காக நிருவாக ரீதியான தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

**3. இலங்கை வங்கி**

**விதிப்புத்திகதி:** 2022 ஒத்தோபர் 13

**தொகை:** ரூ. 3,000,000.00 (ரூபா மூன்று மில்லியன்)

**கொடுப்பனவுத் திகதி:** 2022 நவெம்பர் 14

2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகளின் கீழ் பெயர்குறிக்கப்பட்ட ஆளுடன் வங்கி வியாபார தொடர்பை பேணிவருகின்றமையினால், பெயர்குறிக்கப்பட்ட பட்டியலில் உள்ளடக்கப்பட்ட நிறுவனங்கள் அல்லது தனிப்பட்டவர்கள் எவருடனும் எந்தவொரு தொழில் உறவும் இடம்பெறவில்லை அல்லது தொடர்பைக் கொண்டிருக்கவில்லை என்பதை உறுதிசெய்வதற்கு ஏற்கனவேயுள்ள அனைத்து தொழில் தொடர்புகளையும் பரிசோதிப்பதற்கு தவறியமைக்காக நிருவாக ரீதியான தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

4. நெஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி

**விதிப்புத்திகதி:** 2022 ஒத்தோபர் 13

**தொகை:** ரூ. 1,000,000.00 (ரூபா ஒரு மில்லியன்)

**கொடுப்பனவுத் திகதி:** 2022 நவெம்பர் 14

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

நிதியியல் உளவறிதல் பிரிவினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளைப் கடைப்பிடிப்பதற்கு தவறியமைக்காகவும், நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் (2,5 (ஆ), 6 மற்றும் 14(1) (ஆ) (iii) ஆம் பிரிவுகள்) ஏற்பாடுகளுடனும் 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்களின் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம்) விதிகள் 7, 8, 9, 10 மற்றும் 27(2) ஆகியவற்றுடனும் இணங்காமைக்காகவும் நிருவாக தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

5. தேசிய சேமிப்பு வங்கி

**விதிப்புத்திகதி:** 2022 ஒத்தோபர் 13

**தொகை:** ரூ. 750,000.00 (ரூபா எழுநூற்று ஐம்பதாயிரம்)

**கொடுப்பனவுத் திகதி:** 2022 நவெம்பர் 14

**தண்டப்பணம் விதிக்கப்பட்டதற்கான காரணம்:**

2076/18ஆம் இலக்க 2018.06.20ஆம் திகதியிடப்பட்ட, 2124/32ஆம் இலக்க 2019.05.23ஆம் திகதியிடப்பட்ட, 2140/16ஆம் இலக்க 2019.09.09ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகளில் 2012ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகளின் கீழ் விடுக்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட ஆட்களையும் நிறுவனங்களையும் உள்ளடக்கிய பட்டியல்களை வங்கி பேணியிருக்காமையினால் பெயர்குறிக்கப்பட்ட ஆட்களினதும் நிறுவனங்களினதும் அனைத்து தொடர்புடைய ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானங்கள் பட்டியல்களைப் பேணுவதற்கு தவறியமைக்காக நிருவாக ரீதியான தண்டப்பணம் விதிக்கப்பட்டது. முறைமைகளிலும் நடைமுறைகளிலும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்ட போதிலும், தேசிய சேமிப்பு வங்கியினால் பேணப்படுகின்ற பெயர்குறிக்கப்பட்ட தனியாட்களுடனான அல்லது நிறுவனங்களுடனான தொழில் தொடர்புகள் பற்றிய நிகழ்வுகள் தளப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்படவில்லை.